Yellow Journals

* 192 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are aware of the obscene and slanderous journals published and sold in public in the State; and

(*b*) if so, the steps taken against the publication of such journals?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) A few "Yellow" journals disseminating obscene and scurrilous matter among the public in the State have been brought to the notice of the Government.

(*b*) To curb such journals, the Government have, whenever occasion demanded it, launched prosecutions under Section 292, Indian Penal Code, against the persons responsible for such publications. The Government are also examining proposals to amend the relevant provisions of the Indian Penal Code so as to cover publication of indecent or scurrilous matter, or matter intended for blackmail.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that the number of these journals has increased recently?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am not in touch with these journals (laughter). Perhaps it may be so.

MR. SPEAKER : I will give chance to put supplementaries to those who have given notice of questions. If there is time, I will give chance to others also. Sri Lazar will now put his supplementary.

SRI N. K. PALANISAMI : சர்க்கார், இந்த மாதிரியுள்ள "எல்லோ ஜர்னல்களை"-யும் தடை செய்ய ஒரு மசோதா கொண்டு வர நாலைந்து வருடங்களுக்கு முன்பாகவே ஒரு ஏற்பாடு செய்தார்கள். இதுவரையில் அதை ஏன் கொண்டுவரவில்லை? தாமதத்திற்கு காரணம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு முன்னால், "பிரஸ் (அப்ஜக்ஷணபிள் மாட்டர்ஸ்) ஆக்ட்" என்ற சட்டம் இருந்தது. அந்தச் சட்டம் இருக்கிற வரையில் அதன் கீழ் நடவடிக்கைகள் எடுக்க முடிந்தது. இப்பொழுது அந்தச் சட்டம் அமுலில் இல்லை. இப்பொழுது நாமே ஒரு தனிச்சட்டம் நம் ராஜ்யத்திற்கு ஏற்படுத்த வேண்டுமென்ற முறையில் ஒரு சட்டம் தயாரித்துக் கொண்டிருக்கிறோம், ஐ.பி.ஸி. யைத் திருத்துவதற்கும் கூடிய சீக்கிரம் சட்டம் கொண்டுவரப்படும்.

SRI S. LAZAR : "அப்சீன்" படங்களையுடைய புத்தகங்கள் எல்லாயிடங்களிலும் பகிரங்கமாக விற்கப்படுகிறது. இவைகளை தடுப்பதற்கான சட்டம் வருவதற்கு சிறிது தாமதம் ஏற்பட்டாலும் இதுபோன்று பகிரங்கமாக விற்பதைத்தடுக்க உடனடியாக ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : வெறும் நடவடிக்கைகள் எடுப்பது முடியாத காரியம். சட்டத்திற்கு உட்பட்டுத்தான் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இப்பொழுதுள்ள சட்டத்தில் அந்த அதிகாரம் இல்லாததால் அந்தச் சட்டத்தை திருத்தவேண்டுமென்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

10th February 1959]

SRI A. VEDARATHNAM : இந்நாட்டிலுள்ள பத்திரிகைகளில் வருகிற செய்திகளை எல்லாம் உண்மையென்று நம்புகிற பழக்கம் ஜனங்களிடத்திலே இருக்கிறது. அந்நிலையில் அநேகம் பத்திரிகைகள் உண்மைக்கு மாறான செய்திகளை பிரசுரிக்கின்றன. சட்ட சபையில் நடந்த விஷயங்களைக்கூட நடந்ததற்கு மாறாக பிரசுரம் செய்ததின் மேல், அதிகாரம் இருந்ததால் அதன் மேல் நடவடிக்கைகள் எடுக்க முடிந்தது. அதேபோன்று வெளியிலுள்ள காரியங்களை உண்மைக்கு மாறான விதத்தில் பிரசுரித்தால் வரப்போகிற சட்டத்தில் அவைகளின் பேரில் நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : உண்மைக்கு மாறுபட்ட செய்திகள் எல்லாவற்றின் மீதும் நடவடிக்கைகள் எடுப்பது என்பது முடியாத காரியம். ஆபாச பிரசுரங்கள், மக்களின் ஒழுக்கத்தைக் கெடுக்கும் பிரசுரங்களைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க இப்பொழுது சட்டம் திருத்தப்படுகிறது. உண்மைக்கு மாறாக இருந்தால் அந்த உண்மை வெளிப்பட்டு விடும். மக்கள் உணர்ந்து கொள்வார்கள். எந்தெந்த பத்திரிகைகள் உண்மையான செய்திகளைப் பரப்புகின்றன ? எந்த பத்திரிகைகள் பொய் செய்திகளை பரப்புகின்றன என்று மக்களுக்கு இப்பொழுது தெரிந்திருக்கிறது என்று நம்புகிறேன்.

SRI V. K. KRISHNAMURTHY : தலைவர் அவர்களே, கூடா ஒழுக்கத்தை அடிப்படையாகக்கொண்டு, கூடா ஒழுக்கத்தை கைக்கொண்டிருக்கும் நூல்கள் அத்தனையும் தடை செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : "அப்ஜெக்ஷனபில் மாட்டர்" என்று சொல்லும்பொழுது புத்தகங்களும் வரும், பத்திரிகைகளும் வரும், சுவர் ஒட்டிகளும் வரும், படங்களும் வரும். எல்லாமே அதற்குள்ளாக வரும்.

Report of the Agricultural Administration Committee

* 174 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Agricultural Administration Committee's (Nalagarh Committee) report was examined by this Government;

(*b*) if so, what are the recommendations that are to be implemented by this Government; and

(*c*) what are the recommendations that are not possible to be implemented and why?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The recommendations contained in the Report of the Committee are under examination of the Government.

(*b*) & (*c*) Since the recommendations are still under examination it will not be possible to give the details, till the final decisions are taken.

SRI K. SATTANATHA KARAYALAR : இதிலே முடிவு எடுப்பதற்கு இன்னும் எத்தனை காலம் ஆகும் என்பதைச் சொல்லமுடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒவ்வொன்றாக முடிவு செய்யப்பட்டு வருகிறது.